# யா/வாதரவத்தை விக்னேஸ்வர

# வித்தியாலயம் புத்தூர்.

## பரிசில் நாள் – 2011

## அதிபர் அறிக்கை

# PRIZE DAY-2011

## PRINCIPAL'S REPORT

# நிகழ்ச்சி நிரல்

- ☆ விருந்தினர்கள் வரவேற்பு
- ☆ மங்கள ஒளியேற்றல்
- ☆ இறைவணக்கம்
- ☆ வரவேற்பு நடனம்
- ☆ வரவேற்புரை
- ☆ அதிபர் அறிக்கை
- ☆ மாணவர் உரைகள்
  - தமிழ்
  - ஆங்கிலம்
- ☆ பரிசல் வழங்கல்
- ☆ சிறப்புவிருந்தினர் உரை
- ☆ பிரதமவிருந்தினர் உரை
- ☆ கவியரங்கம்
- ☆ கும்மி நடனம்
- ☆ குழு இசை
- ☆ நன்றியுரை

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## மகுட வாசகம் MOTTO

கடமையே கண்

**Duty First and Foremost!**

## எமது நோக்கு Our Vision

அறிவாற்றலும், கலையுடன் பண்பாடும் அமைவுறப் பெற்று, சமநிலை ஆளுமை கொண்ட நற்பிரசைகளாகச் சமூகத்திற்கு வழங்கல்.

Generating good Citizens endowed with knowledge and capabilities, art and culture and a balanced personality.

## எமது பணி - Our Mission

1. பயனுறுதிமிக்க கற்றற செயற்பாடுகளினூடாக தேர்ச்சி இலக்கினை நோக்கிப் பயணித்தல்.

   Progressing towards Competency Goals through effective learning activities

2. விளைதிறன் மிக்க கற்றற்பேறுகளைக் கொண்ட மாணவர் மையக் கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

   Planning and implementing student- cebtred learning activities which have productive learning outcomes.

3. நல்லொழுக்கம், மானிட விழுமியம், தலைமைத்துவம், 21ஆம் நூற்றாண்டின் தொழில் மற்றும் வாழ்வியல் உலகிற்கான பிரவேசம், சவால்களை வெற்றிகொள்ளும் திறன் ஆகியன கற்றற் பேறுகளில் பிரதிபலிக்கச் செய்தல்.

   Reflecting in learning outcomes high moral standards, human values, leadership qualities, requisites for entry into the world of word and life in the 21th century and ability to overcome challenges.

4. இணைபாடவிதானச் செயற்பாடுகளில் முழுமையான பங்களிப்புக்கும், ஆற்றல் வெளிப்பாட்டிற்கும் வழிவகுத்தல்.

   Guiding for full involvement in co-curricular activities and for bringing out full potentials.

# பரிசில் நாள் -2011

## அதிபர் அறிக்கை

எமது பாடசாலையின் பரிசில் நிகழ்வுகள் இனிதே நிறைவேற இன்றைய நந்நாளை எமக்களித்த எல்லாம் வல்ல இறைவனை முதற்கண் வணங்கி இவ்வேளையில் பரிசில் நாள் - 2011 அதிபர் அறிக்கையினை சபையில் முன் சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றேன்.

இன்றைய பரிசில் நாள் விழாவைச் சிறப்பிக்க எமது அழைப்பினை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்து விழா அரங்கை சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் மதிப்பார்ந்த திரு.யோ.ரவீந்திரன் அவர்களே! அவர் தம் பாரியார் திருமதி. ரவீந்திரன் அவர்களே!

நிகழ்வைச் சிறப்பிக்க எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் எமது அயற்பாடசாலைகளின் அதிபர்களே! ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே! பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே! பழைய மாணவர் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே! அன்பார்ந்த பெற்றோர்களே! பழைய மாணவர்களே! எனது அன்பிற்கினிய ஆசிரியர்களே! அன்பார்ந்த மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் இனிய காலை வணக்கத்தை தெரிவித்து அனைவரையும் மனமகிழ்வுடன் வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

இன்றைய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பதில் கல்விப்பணிப்பாளர் திரு. யோ. ரவீந்திரன் அவர்கள் பௌதீக விஞ்ஞானத்துறை பட்டதாரி ஆசிரியராக தனது கல்விச் சேவையினை ஆரம்பித்து பிந்நாளில் இலங்கை கல்வி நிர்வாக சேவைஅதிகாரியாக கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாண கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளராக, கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப்பணிப்பாளராக, நிர்வாகத்துறை பிரதிக் கல்விப்பணிப்பாளராக, பதில் வலயக் கல்விப்பணிப்பாளராக என பல்வேறு தளங்களில் நின்று அரும் பணியாற்றி வருகின்றார். எமது பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக செயற்பட்டு வரும் திரு. ரவீந்திரன் அவர்கள் எமது பாடசாலையின் பௌதீகவள மனிதவள அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பு நல்கியுள்ளார் எனின் மிகையாகாது. கல்வி நிர்வாக சேவை வகுப்பு II இனை சார்ந்த சிரேஷ்ட கல்வி நிர்வாகியாக திகழும் திரு.யோ. ரவீந்திரன் அவர்கள் கல்வி முதுமாணிப் பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்காலத்தில் மேலும் உயர் பதவிகளைப் பெற்று கல்வி உலகில் சிறப்பான பணியாற்றிச் சிறக்க வேண்டுமென பாடசாலைச் சமுகத்தின் சார்பாக பிரதம விருந்தினர் அவர்களை இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

பிரதம விருந்தினர் அவர்களின் பாரியார் திருமதி. ரவீந்திரன் அவர்கள் ஆசியராக பணியாற்றி வருகின்றார். அவர்தம் சேவையில் சிறப்படையவும் உயர்வடையவும் இந்நாளில் நாம் வாழ்த்துகின்றோம்.

எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்கும் எமது கோப்பாய் கல்விக்கோட்டத்தின் கல்விப்பணிப்பாளர் திரு .வே. பாலசுப்பரமணியம் அவர்கள் பல வருடங்களாக எமது பிரதேசப் பாடசாலைகளில் அதிபராகப் பணியாற்றியவர். கடந்த ஆண்டிலே கோட்டக் கல்விப்பணிப்பாளர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டவர்.சிறந்த முகாமைத்துவத்திறனும் ஆற்றலும் மிக்க அதிபராகப் பணியாற்றி வந்த இவர் தற்போது கோப்பாய் கல்விப் பிராந்தியத்தின் கல்வி முன்னேற்றத்திற்காக மிக்க துடிப்போடு செயற்பட்டு வருகின்றார்.எமது பாடசாலை விருத்தியிலும் மிகுந்த அக்கறை கொண்டவர் என்ற வகையில் அவரை மகிழ்வுடன் வரவேற்று அவர்களின் பணி சிறக்க இவ்வேளையில் மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

அடுத்து எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக எம்மோடு கலந்து சிறப்பத்துக் கொண்டிருக்கும் ஆசிரிய ஆலோசகர் திரு.ச.அருந்தவரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் பல வருடங்களாக விஞ்ஞான பாடத்திற்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக பணியாற்றி வருகின்றார். யாழ்ப்பாண மாவட்டம் இரு வலயங்களாக இயங்கிய காலப்பகுதியில் வலயம் இரண்டிலும் பின்னர் யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலும் இவரது அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றார். இவரது உழைப்பு மிகப்பெறுமதியானது. அவரது சேவையினை எமது பாடசாலையும் பல வருடங்களாகப் பெற்றுக் கொண்டு வருகின்றது.அதற்காக நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.இன்னும் சில மாதங்களில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ள இருக்கும் திரு.ச.அருந்தவரத்தினம் அவர்கள் ஓய்வக்காலத்திலும் அரிய கல்விப் பணியாற்றி மகிழ்வுடன் வாழ இவ்வேளையில் நாமும் மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

1 பல வருட கால இடைவெளிகளின் பின்னர் நடைபெறுகின்ற இன்றைய பரிசில் நாள் விழாவில் கடந்த இரண்டு ஆண்டு கால எமது பாடசாலைச் செயற்பாடுகளை உள்ளடக்கியதாக இவ்வறிக்கையைச் சமர்பிக்க விழைகின்றேன்.

கடமையே கண் ( Duty first and foremost) எனும் மகுடவாசகத்தினை தனதாக்கிக் கொண்ட இவ்வித்தியாலயம் அறிவுடன் ஆற்றல்களும் கலையுடன் பண்பாடும் ஒருங்கே அமையப் பெற்ற சமநிலை ஆளுமை கொண்ட நற்பிரஜைகளை இச்சமுகத்திற்குக் கையளிக்கும் கைங்கரியத்தை தன் தூரநோக்காகக்(vision) கொண்டு அதற்கான பணிகளில் ஆழக்கால்பதித்து நிற்கும் இவ்வேளையில் காலத்தின் தேவை கருதி இவ்விழாவை நாம் முன்னெடுத்துள்ளோம். தொடர்ந்தும் ஒவ்வோர் ஆண்டும் பரிசில் நாள் விழாவை நடாத்துவதை எமது பிரதான பணியாகத் தீர்மானித்துள்ளோம்.இன்றைய விழாவில் 2010 ஆண்டில் தமது திறமைகளை பல்வேறு தளங்களில் வெளிப்படுத்திய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசில் பெறவுள்ளனர்.அவர்கள் அனைவரையும் இவ்வேளையில் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

எமது மாணவர் விபரம்:-

* ஆரம்பப் பிரிவு - ஆண் 57 பெண் 62 (தரம்1-5)
* இடைநிலைப் பிரிவு - ஆண் 54 பெண் 53 (தரம்6-11)
* மொத்த மாணவர் தொகை- 226

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான குடும்ப எண்ணிக்கை கொண்ட இப்பிரதேசத்தில் மாணவர் வளமும் மட்டுப்படுத்தப்பட்டதாகும். இப்பிரதேசத்தில் வசிக்கும் மாணவர்கள் அனைவருமே இப்பாடசாலையிலேயே தமது கல்வியைக் கற்கின்றனர். எவரும் ஆரம்பக் கல்விக்கோ அன்றேல் இடைநிலைக் கல்விக்கோ வேறு பாடசாலைக்குச் செல்வதில்லை என்பதும் சிறப்பாக குறிப்பிடத்தக்கதாகும்.

எமது ஆசிரிய அணியினர்:-

எமது பாடசாலைக்கு அணிசேர்க்கும் ஆசிரியர் குழாத்தில் தற்போது பத்தொன்பது ஆசிரியர்கள் பணியாற்றுகின்றோம். அவர்களுள் இருவர் பகுதிநேர ஆசிரியர்களாகவும் (மூன்று நாட்கள்) இருவர் தற்காலிக இணைப்பில் விடுவிக்கப்பட்டு வேறு பாடசாலையில் பணியாற்றுபவராகவும் உள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| * | அதிபர் | 01 | SLPS II |
| * | பயிற்றப்பட்ட பட்டதாரிகள் | 02 | |
| | கணிதம் | 01 | |
| | விஞ்ஞானம் | 01 | |
| * | பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | | |
| | வர்த்தகம் | 01 | |
| | ஆங்கிலம் | 01 | |
| | ஆரம்பக்கல்வி | 03 | |
| | சித்திரம் | 01 | (பகுதிநேரம்) |
| | விவசாயம் | 01 | (பகுதிநேரம்) |
| * | பயிற்றப்படாத பட்டதாரிகள் | 08 | (இருவர் தற்காலிக விடுப்பு) |
| * | ஆசிரிய உதவியாளர் | 01 | |
| | மொத்தம் | 19 | |

பல்வேறு சிரமங்களுடனும் நீண்டதூரப் பயணங்கள் ஊடாகவும் வருகை தந்து பணியாற்றி வருகின்ற இவ்வாசிரியர்களின் உன்னத சேவையினைப் பாராட்டுவதுடன் அவர்கள் வாண்மை விருத்தியிலும் அரப்பணிப்பான சேவையிலும் சிறந்து விளங்கிட இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

<u>இடமாற்றமும் புதிய வருகையும்</u>

எமது பாடசாலையில் பல வருடங்களாகக் கற்பித்து வந்த ஆசிரியர்கள் பலர் கடந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இடமாற்றத்தின் மூலம் வேறு பாடசாலைக்கு பணியாற்றச் சென்றுள்ளனர்.

| | |
|---|---|
| திரு.சி. பொன்சிவநேசன் | திருமதி.வெ.கேதீஸ்வரன் |
| திரு.கு. கிருபாகரமூர்த்தி | திரு.இ. சந்திரராஜ் |
| திரு.தி. முருகையா | திரு.கு. சரவணேஸ்வரன் |

ஆகியோர் எம்மோடு பணியாற்றி இடமாற்றலாகிச் சென்று வேறு பாடசாலைகளில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் சென்ற இடத்தில் சேவையில் சிறக்க நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

அத்துடன் எமது பாடசாலையில் தற்காலிக இணைப்புப் பெற்றிருந்த வன்னிப்பிரதேசப் பாடசாலை ஆசிரியர்கள் கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலுமாக அனைவருமே தமது சொந்தப் பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர்.

திருமதி.சிவசோதி இராஜேஸ்வரன் செல்வி.கு.சத்தியரஜனி

திரு.கு. தங்கராசா திரு.சி.பத்மதாசன்

திரு.ஆ.சிவசுதர்சன்

ஆகியோர் இவ்வாறு பணியாற்றியோராவர்.இவர்களுள் செல்வி.கு. சத்தியரஜனி திரு.ஆ.சிவசுதர்சன் ஆகியோர் இரண்டு வருடங்களுக்கு மேலாக எம்மோடிணைந்து சேவையாற்றி வந்தனர். இவர்கள் அனைவரும் தாம் பணியாற்றும் இடங்களில் பணியிற் சிறந்து விளங்கிட நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

**எம்மோடு இணைந்து கொண்டோர்**

கடந்த ஆண்டிலும் இவ் ஆண்டிலும் இடமாற்றங்கள் மூலமும் புதிய நியமனங்கள் இணைந்து கொண்ட ஆசிரியர்களை மிகுந்த மகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

1. திரு.சி.ரவிச்சந்திரன் - விஞ்ஞானப்பட்டதாரி
2. திரு.சு.இந்திரகுமார் - கணிதப்பட்டதாரி
3. திரு.இ.இளங்கோ - ஆரம்பக்கல்வி தேசிய டிப்ளோமா
4. திரு.ஜெ.பிரபாகரன் - சங்கீதப்பட்டதாரி
5. செல்வி பொ.சத்தியப்பிரியா - நடனப்பட்டதாரி
6. திருமதி.கீ.சாந்தினி – சித்திரப்பட்டதாரி

ஆகியோர் எம்மோடு இணைந்து கொண்டனர். அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்பதில் மிகுந்த மகிழ்வடைகின்றோம்.

திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட எம் ஆசிரியர்கள்

திருமதி.ஜெமல்டா ஜெபரட்ணதாஸ்

திரு. து. ஜீவானந்தன்

திரு. ச. ரவிச்சந்திரன்

திரு. ந. சிவாகரன்

திருமதி.சத்தியப்பிரியா கயேந்திரன்

ஆகியோரை சகல சௌபாக்கியங்களும் பெற்று மகிழ்ந்து வாழ வாழ்த்துகின்றோம்.

## துயர நிகழ்வு

எம்முடன் பணியாற்றிய ஆசிரியர் திருமதி இலக்குணதேவி கனகலிங்கம் அவர்களின் திடீர் மறைவு (22-04-2011) எமக்கு ஆழ்ந்த துயரத்தைத் தந்துள்ளது. அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அன்னாரின் இழப்பு எமக்குப் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

## பெற்றோர் பழைய மாணவர் சமூகத்தொடர்பு

பாடசாலையின் பயனுறுதிமிக்க செயற்பாட்டுக்கு சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதாகும். அந்தவகையில் நோக்கும்போது எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் சமூகத்தின் உயிரோட்டமான பங்களிப்பினை மேம்படுத்த வேண்டியுள்ளது. இத்தேவையை நிறைவேற்றும் நோக்கில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலை அபிவிருத்திக் குழு பழைய மாணவர் சங்கம் என்பன அமைக்கப்பட்டு செயற்படுத்துவதுடன் வகுப்பு ரீதியான பெற்றோர் சந்திப்புக்கள் பாடசாலை விழாக்கள் நிகழ்வுகளில் பெற்றோரின் வருகையை அதிகரிக்கச் செய்தல் போன்ற முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு சமூகத்தின் ஈடுபாட்டை பாடசாலையின் பால் ஈர்த்துக்கொள்ள முயற்சிக்கப்படுகின்றது. அவற்றில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளோம். இப்பிரதேசத்தில் வசிக்கும் பெற்றோர்கள் அனைவரும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களே என்ற வகையில் பெற்றோர்கள் பழைய மாணவர்களின் காத்திரமான ஈடுபாடு பாடசாலையின் பால் உள்ளது. அது மேலும் மேலும் மேம்பட வேண்டியதும் அவசியமாகின்றது. பாடசாலை நிகழ்வுகளிலும் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திலும் அண்மைக்காலமாக பெற்றோர்களின் பங்களிப்பு அதிகரித்து வருவது பாராட்டுக்குரியது.

பழைய மாணவர் சங்கம் பாடசாலை நிகழ்வுகளுக்கு பங்களிப்பினை நல்கி வருகின்றது. வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பழைய மாணவர்களின் பங்களிப்புடன் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் (2010) எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை நடாத்துவதற்கு பழைய மாணவர்கள் பெற்றோர்கள் கணிசமான நிதிப்பங்களிப்பினை நல்கினர்.அந்தவகையில் பங்களிப்பினை நல்கிய பழைய மாணவர்கள் பெற்றோர்கள் அனைவருக்கும் இச்சந்தர்பத்தில் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜேர்மனியில் வசிக்கும் இ.தயாபரன் இப்பாடசாலைக்கான பல்வேறு பங்களிப்புக்களை பல வருடங்களாக வழங்கி வருகின்றார். சிறுவர் விளையாட்டு முற்றம் மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி வழங்கல் என்பன அவரது பங்களிப்பால் மேற்கொள்ளப்பட்டதாகும். அத்துடன் கிழக்குப்புற காணிக்கான உதவித்தொகை ரூபா 20000.00உம் அவரது உதவியாகும். மேலும் இவர் கடந்த வருடம் முதல் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்கத்தகுதி பெறும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டியினை வழங்கி ஊக்குவித்து வருகின்றார். கடந்த வருடம் நான்கு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டது. இவ்வாண்டில் 13 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. அவரின் அளப்பரிய பணி பாராட்டத்தக்கது. அவரது ஊக்குவிப்புக்களுக்காக இப்பிரதேச சமூகம் என்றும் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. அன்னாரின் வாழ்வு சிறக்க இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் கடந்த வருடத்தில் கனடாவில் வசிக்கும் திரு.கிருஷ்ணப்பிள்ளை பாலகிருஷ்ணன் அவர்களால் போட்டோப் பிரதி இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அத்துடன் புதிய கட்டிடமொன்றைக் கட்டுவதற்கான ஆரம்ப நிதியாக ரூபா10000.00 அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அன்னாரின் குடும்பத்திற்கு நல்லருள் கிடைக்க வேண்டுமென நன்றியுடன் பிரார்த்திகின்றோம்.

கடந்த இரண்டு வருட காலத்துக்கு முந்திய காலங்களில் பங்களிப்பினை நல்கிய பெற்றோர்கள் பழைய மாணவர்களுக்கும் இவ்வேளையில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கௌரவ அமைச்சருக்கு எமது நன்றிகள்

கடந்த வருடம் நடாத்தப்பட்ட எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த கௌரவ அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பாரம்பரிய சிறுகைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் எம்மால் விடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டதுடன் மறுதினமே பல்லூடக எறியியினை (multy media) வழங்கி உதவினார். அமைச்சருக்கு எமது பாடசாலைச் சமூகத்தினரின் நன்றிகள் என்றும் உரித்தாகுக.

## கிழக்குப்புற காணி பாடசாலை உடமையாக்கப்பட்டமை

பாடசாலைக்கு கிழக்குப்புறமாக அமைந்துள்ள காணி 1974ஆம் ஆண்டில் அரசுடமையாக்கப்பட்டிந்த நிலையில் தனியாரின் பாவனையிலேயே இருந்து வந்தது. கடந்த ஆண்டில் அக்காணியினை பாடசாலைப் பாவனைக்குட்படுத்த நாம் முயற்சித்த போது நீண்ட காலமாக பாவனைக்குட்படுத்தி வந்தவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியிருந்தது. அவ்வுதவித் தொகையை வழங்க முன்வந்த திரு.த.உதயகுமார் திரு.த.தயாபரன் ஆகியோர் வழங்கிய தலா 20000.00 நிதித்தொகை இரு குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டதுடன் காணி பாடசாலைப் பாவனைக்குட்படுத்தப்பட்டிக்கின்றது. அக்காணியைச் சுற்றி வேலி அமைப்பதற்கான நிதியுதவியையும் பழைய மாணவர்களே வழங்கினர். அந்தவகையில் அவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## பரீட்சைப் பெறுபேறுகளும் அடைவுகளும்

க.பொ.சா.தரப் பரீட்சை - 2009-2010 நூற்றுவீதம்

| | பாடங்கள் | 2009 | 2010 |
|---|---|---|---|
| 1. | தமிழ் மொழி | 91 | 87 |
| 2. | கணிதம் | 36 | 93 |
| 3. | விஞ்ஞானம் | 18 | 47 |
| 4. | ஆங்கிலம் | - | - |
| 5. | வரலாறு | 82 | 100 |
| 6. | சைவநெறி | 100 | 100 |
| 7. | புவியியல் | 100 | 47 |
| 8. | சித்திரம் | 100 | 100 |
| 9. | சங்கீதம் | 83 | 100 |
| 10. | விவசாயம் | 18 | 87 |

2009 ஆம் ஆண்டில் 37 வீதமானோர் க.பொ.த.உயர்தரம் கற்கத்தகுதி பெற்றனர். 2010இல் 87 வீதமானோர் உயர்தரம் கற்கத்தகுதி பெற்றனர். எதிர்காலத்தில் சித்தி வீதத்தினை மேலும் அதிகரிக்க வேண்டுமென்பதுடன் க.பொ.த.உயர்தரத்தில் கணித விஞ்ஞானத் துறையைத் தெரிவு செய்வதற்கான தகைமையையும் மனப்பாங்கினையும் ஏற்படுத்த வேண்டியுள்ளமையைக் கவனத்திற் கொண்டுள்ளோம்.

### புலமைப் பரிசில் பரீட்சை

பல வருடங்களாக தரம் 05 புலமைப் பரிசில்பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு உயர்வாக புள்ளி பெறும் நிலை ஏற்படவில்லை. கடந்த ஆண்டில் 2010இல் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக நான்கு மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த (100க்கு மேல்) புள்ளிகளைப் பெற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து இவ்வாண்டிலும் எதிர்காலத்திலும் இதனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

## மாணவர் ஆசிரியர் நலன்புரி நடவடிக்கைகள்

மாணவர்கள் ஆசிரியர்களின் நலன்களை மேம்படுத்தும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**1.குடிநீர்,மலசல கூட வசதிகள்:-**

ஆசிரியர்கள் மாணவர்களுக்கான குடிநீர் வசதிகள், மலசல கூட வசதிகள் மிகவும் சிறப்பான வகையில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. யுனிசெவ் அமைப்பின் உதவி மூலம் இத் தேவைகள் எமக்கு முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு குடிநீர் குழாய் வசதிகள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளதுடன் மலசலகூடம், சமையற்கூடம் ஆகியவற்றிற்கும் நீர்வசதி செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கான மலசலகூடம் நிக்கொட் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் ஆண்களுக்கான மலசல கூடமின்மை ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. கடந்த வருடத்தில் யுனிசெவ் அமைப்பினரால் புதிதாக ஆண்களுக்கான மலசலகூடம் நிர்மானிக்கப்பட்டு பாவனையிலுள்ளது. கைவிடப்பட்டிருந்த ஆசிரியர்களுக்கான மலசலகூடமும் திருத்தப்பட்டு பாவனையிலுள்ளது. அந்தவகையில் எமது பாடசாலையின் குடிநீர் மற்றும் மலசலகூடத் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்காக முழுமையான பங்களிப்பை வழங்கிய யுனிசெவ் அமைப்புச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும், எமது திணைக்களத்தின் பாடசாலை வேலைகள் பகுதி உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் என்றும் உரித்தாகுக.

**2. மதிய உணவு வேலைத்திட்டம்:-**

W.F.P அனுசரணையில் மேற்கொள்ளப்படும் இவ்வேலைத்திட்டம் எமது பாடசாலையில் மிகச்சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சமையலறை வசதி, சிக்கன அடுப்பு வசதி, என்பன கிடைக்கப்பெற்றுள்ளதுடன் ஒரு பானை நிறுவனத்தின் மிகுந்த பங்களிப்பும் கிடைப்பதனால் இவ்வேலைத்திட்டத்தின் மூலம் வெற்றிகரமாக தரமிக்க போஷாக்கு உணவினை தினமும் மாணவர்களுக்கு வழங்க முடிகின்றது. அத்துடன் கோப்பாய் லயன்ஸ் கழகம் எமது மாணவர்களின் மதிய உணவு வேலைத்திட்டத்தைச் சிறப்பாக்கும் வகையில் உணவு பங்கிடுவதற்கான சில்வர் வாளிகளும், மாணவர் உணவு உண்பதற்கான சில்வர் தட்டுக்கள், கரண்டிகள் என்பனவற்றைப் பெருந்தொகைச்செலவில் எமக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. மதிய உணவு வேலைத்திட்டத்தினை எமது பாடசாலையில் சிறப்பாக மேற்கொள்ள பங்களிப்பு நல்கியுள்ள W.F.P அமைப்பினர், ஒருபானை நிறுவனத்தினர் கோப்பாய் லயன்ஸ் கழகம் ஆகியோரிற்கு எமது உளமறிந்த நன்றிகள் உரித்தாகுக.

3. முதலுதவி வசதிகள்:-

முதலுதவி மருத்துவ பொருட்கள் மாணவர்கள் ஆசிரியர்களின் பாவனைக்கு ஏற்றதாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதற்கான மருந்துப் பொருட்கள் TRRO நிறுவனத்திடமிருந்தும் மற்றும் சுகாதார பரிசோதகரிடமிருந்தும் பெறப்பட்டுள்ளது. வைத்திய சுகாதார பரிசோதனைகளும் கிரமமாக எமது பாடசாலையில் நடைபெற்று வருகின்றது.

4. ஆசிரியர் நலன்புரிக் கழகம்

ஆசிரிய நலன்புரிக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் தேவைகள், மங்கள அமங்கல நிகழ்வுகளில் கலந்துகொள்ளல் ஆகியவற்றைத் கவனித்து வருகின்றது. இக் கழகத்தின தலைவராக ஆசிரியர் பொ. பரஞ்சோதி செயற்பட்டு வருகின்றார்.

# பௌதிக வள வசதிகள்:-

1. பாடசாலை நூலகம்:-

எமது பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்கென தனியான நூலகக் கட்டிட வசதியுண்டு. கடந்த இருவருட காலத்திலும் ESDFP நிதி ஒதுக்கீட்டிலிருந்தும் கணிசமான அளவு நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டிலும் அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளது. தற்போது மாணவர்களும் தமது பிறந்தநாள் பரிசாக நூலகத்திற்குப் புத்தகங்களை வழங்க முன்வந்துள்ளார்கள். மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. நூலகப் பொறுப்பாசிரியராக **திரு.து. ஜீவானந்தன்** செயற்பட்டு வருகின்றார்.

2. கணினிக்கற்கைக் கூடம்:-

E.K.S.P செயற்றிட்டத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டில் எமது பாடசாலையில் கணினிக்கூடம் அமைக்கப்பட்டு தற்போது பத்துக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. வாரம்தோறும் பாடவேளை ஒவ்வொரு வகுப்புக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் சகல மாணவர்களுக்கும் கணினிக்கற்கை வசதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இக்கற்கைக் கூடத்தில் இறுவட்டுக்கள் (CD) மூலமும் பல்லூடக எறியியின் துணையுடனும் ஏனைய பாடக்கற்றலுக்கான செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றது. தரம் 11 இல் ஒரு மாணவன் தகவல் தொழில்நுட்பபாடதைக் கற்று இம்முறை க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ளார். கணினிக் கற்கைக்கூடத்திற்கு பொறுப்பாசிரியராக **செல்வி. வித்யா குமாரசாமி** செயற்பட்டு வருகின்றார்.

3. **விஞ்ஞான ஆயவு கூடம்:-**

ESDP வேலைத்திட்டத்தின் கீழ் எமது பாடசாலையில் புதிய விஞ்ஞான ஆய்வுகூடம் கடந்த ஆண்டில் (2010) நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுவருகின்றது. க.பொ.த சாதாரண தரம் வரையான விஞ்ஞானக் கற்றலுக்கான முழுமையான வசதிகளைக் கொண்ட ஆய்வு கூடமாக அதனைச் செயற்படுத்தி வருகின்றோம். விஞ்ஞான ஆசிரியர் **திரு.சி.ரவிச்சந்திரன்** இதனைச் சிறப்பாக முன்னெடுத்துவருகின்றார்.

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்:-

1. **விளையாட்டுத்துறை:-**

வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி ஒவ்வோராண்டும் நடாத்தப்பட்டு வருகின்றது. மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் எமது மாணவர்கள் கோட்டம், மாவட்டம், மாகாணப்போட்டிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர். 2010ம் ஆம் ஆண்டில் இருமாணவர்களான செல்வி.பா.தினேஷா, திரு.பா.ஜசிகன் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டனர். அவர்களுள் செல்வன் பா. ஜசிகன் தேசியப் போட்டியிலும் பங்குபற்றினார். இவ்வாண்டிலும் அம்மாணவன் மாவட்ட மாகாணப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். மெய்வல்லுனர் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் விரைவில் பயிற்சி முகாமினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக **திரு.ப.பிரதீபன்** செயற்பட்டு வருகின்றார். பெரு விளையாட்டுக்களிலும் எமது மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புக்களை தற்போது ஏற்படுத்தி வருகின்றோம். கடந்த ஆண்டில் எமது மாணவர் வலைப்பந்தாட்டத்திலும் துடுப்பாட்டத்திலும் கோட்டமட்டத்தில் பங்குபற்றினர். இவ்வாண்டில் துடுப்பாட்டத்தில் எமது மாணவர்கள் அணி வலயமட்டம் வரை பங்குபற்றியது. எதிர்காலத்தில் காற்பந்து, கரப்பந்து, வலைப்பந்து, கிரிக்கெற், எல்லே ஆகிய விளையாட்டுக்களில் போதிய பயிற்சிகள் வழங்குவதற்குப் படிப்படியாக வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.

2. **மாணவர் மன்றங்கள்:-**

1. தமிழ்மன்றம் - பொறுப்பாசிரியர் திரு. க. கிருபாகரன்
2. இந்துமன்றம் - பொறுப்பாசிரியர் திரு. து. ஜீவானந்தன்
3. சமூகவிஞ்ஞானமன்றம் -பொறுப்பாசிரியர் திரு. மு. பேரின்பமூர்த்தி
4. ஆங்கிலமன்றம் - பொறுப்பாசிரியர் திரு. து. சயந்தன்
   செல்வி.கு.வித்யா

5. ஆரம்பப்பிரிவு மாணவர் மன்றம் - பொறுப்பாசிரியர் -திருமதி.க.தவக்குமார்
திரு.இ.இளங்கோ

6. சுகாதாரக்கழகம் - பொறுப்பாசிரியர் செல்வி.சி.கலாசினி
திரு.க.தவக்குமார்

7. கணிதவிஞ்ஞான மன்றம்- பொறுப்பாசிரியர் திரு.சி.ரவிச்சந்திரன்
திரு.ந.இந்திரகுமார்

8. கவின்கலைமன்றம் திரு.ப.பிரதீபன்
திருமதி .ஜெ.பிரபாகரன்
திருமதி.ச.கஜேந்திரன்

இம் மன்றங்களுக்கு மாதாந்தம் காலம் ஒதுக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. இதன்மூலம் மாணவர்களின் துறைசார் ஆற்றல்கள் வெளிப்படும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

3. **சாரணத்துவம்:-**

எமது பாடசாலையில் பதினைந்து பேர் கொண்ட சாரணத்துவ படையணி இவ்வாண்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு இவ்வாண்டின் முதலாம் தவணையில் மேற்கொள்ளப்பட்டது. சாரணத்துவப் பொறுப்பாசிரியராக திரு. து. ஜீவானந்தன் செயற்பட்டு வருகின்றார். சாரண அணியினரால் பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவருகின்றன.

4. சுற்றுச் சூழல் பராமரிப்பு

எமது பாடசாலைப் பிரதேசம் வரண்ட, வெளிப்பிரதேசம் என்ற வகையில் சுற்றுச் சூழலைப் பராமரித்தல், பாதுகாத்தல் என்பன மிகுந்த சிரமமாக இருந்த போதும் பல முயற்சிகளை மேற்கொண்டு எமது சுற்றாடலை மேம்படுத்துவதில் நாம் பெருமளவு வெற்றி கண்டிருக்கின்றோம் என்றே சொல்ல வேண்டும். பாடசாலைக்கு பாதுகாப்பான வேலி அற்ற நிலையில் மரம்செடிகளை வளர்த்தல் பெரும் சிரமமாக இருந்தபோதும் மண்வளம், நீர்வளம் என்பன பொருத்தமற்றவை என தடைகள் முன்னின்ற போதிலும் பாடசாலைப் பூந்தோட்டத்தினை முடிந்தளவுக்கு அமைத்து பராமரித்து வருகின்றோம்.

" தேசத்தின் நிழல் " மரநடுகை வேலைத்திட்டச்செயற்பாடுகள் கடந்த ஆண்டு செப்ரெம்பரில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பல பயன்தரு, நிழல்தரு மரக்கன்றுகள் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டுவருகின்றது. மரக்கன்றுகள் ஒவ்வொன்றும் இலக்கமிடப்பட்டு மாணவர்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டு அவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இவ் வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பாக திரு. க.கிருபாகரன் ஆசிரியர் செயற்பட்டு வருகின்றார்.

**பிள்ளை நேயப்பாடசாலைச் செயற்திட்டம்**

எமது பாடசாலை கடந்த வருடம் பிள்ளைநேயப்பாடசாலை வேலைத்திட்டத்துள் கல்வித்திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டு ரூபா.100000/ வழங்கப்பட்டு அதற்கான வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. பிள்ளை நேயப்பாடசாலை பிரதான எண்ணக்கருக்களை நிறைவேற்றும் வகையில் பாடசாலை அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தரமான கற்றல் பேற்றினை எய்தும் வகையில் வகுப்பறைச் செயற்பாடுகளில் விசேட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல், பாதுகாப்பான பாடசாலைச் சூழலை மேம்படுத்தல், பால்நிலை சமத்துவ வாய்ப்புக்களை வழங்குதல், சிறுவர் உரிமைகள் பேணல் என்ற வகையில் எமது வேலைத்திட்டங்கள் அமைந்திருந்தன.

தொடர்ந்தும் எமது பாடசாலை பிள்ளை நேயப்பாடசாலையாக பேணப்பட வேண்டுமென்ற வகையில் மேலும் மேலும் அது சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டியவர்களாக உள்ளோம். அதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு படிப்படியாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**எதிர்கால நோக்கு:-**

எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு வேலைத்திட்டங்களும், எதிர்பார்ப்புக்களும் எம் கண்முன்னே நிற்கின்றன. தனித்த கிராமத்தில் தனித்து நிற்கும் பாடசாலை என்ற வகையில் தனித்துவம் மிக்க பாடசாலையாக மாற்றவேண்டிய தேவையையும் அவசியத்தையும் நாம் உணருகின்றோம்.

◆ அந்தவகையில் ஆரம்பக்கல்வி மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம்படுத்த காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

◆ மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் எமது மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி நிற்கின்ற போதும் அவர்களுக்கு போதிய பயிற்சிகள இதுவரை வழங்கப்படவில்லை. அத்தகைய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்களின் ஆற்றல்களை வளர்க்க வேண்டியது மிக அவசியமாகின்றது.

◆ மேலும் எமது மாணவர்களுக்கு பெருவிளையாட்டுகளில் பயிற்சியளிக்க வேண்டிய தேவையும் உள்ளது. அவ்வாறான பயிற்சிகளை வழங்கி அணிகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

◆ பாடசாலையின்சுற்றுப்புற வேலிகளைப் புனரமைத்தல் மிக மிக அவசிய தேவையாகவுள்ளது. பாடசாலைச்சுற்றாடல் கவின்நிலையை மேம்படுத்துவதில் கால்நடைகளின் தாக்கம் எமக்கு பெரும் தொல்லையாகவுள்ளது. பின்புற மதிலைப் பூரணப்படுத்தி பாதுகாப்பான பாடசாலைச் சுற்றாடலை உருவாக்குவதன் மூலம் சுற்றாடல் கவின்நிலையை மேம்படுத்த முடியும்.

எமது பாடசாலையில் மாணவர்கள் இறைவழிபாட்டினைச் செய்வதற்கு பொருத்தமான ஒரு இடம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. அதற்கான ஒரு பீடத்தை உருவாக்கி மாணவர்களின் வழிபாட்டிற்கு வழிசெய்தல். அவசியமானதாகவுள்ளது.

மேலும் இன்று எமக்குப் பெரும் பிரச்சினையாகவுள்ள வகுப்பறைப் பற்றாக்குறை தீர்க்கப்பட வேண்டும். இதற்காக வகுப்பறைக் கட்டடத்தொகுதி ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்படுவதன் மூலமே எமது இடப்பற்றாக்குறைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அந்தவகையில் புதிய வகுப்பறைக் கட்டடத்தொகுதியொன்றை நிர்மாணிக்க வேண்டியது எமக்கு அவசியமாகின்றது.

இவ்வாறாக பல்வேறு தேவைகள் எம்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் எம் முன்னே நிற்கின்றன. இத்தேவைகளை நிறைவேற்றுவதில் நாம் முனைந்து செயற்பட வேண்டியவர்களாகவுள்ளோம். அதற்கான உதவிகளை நாம் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம்.

**அன்பார்ந்த பெற்றோர்களே! பழைய மாணவர்களே!**

இந்த வேளையில் உங்களோடு உரையாடுவதற்கு கிடைத்தமையிட்டு மகிழ்வடைகின்றேன். இது எமது பாடசாலை, இதன் வளர்ச்சி எமது கைகளிலேயே தங்கியுள்ளது என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டியவர்களாகவுள்ளோம். பாடசாலையின் அபிவிருத்தியில் அனைவரையும் பங்காளிகளாக எம்மோடு இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். நீங்கள் அனைவரும் மனங்கொண்டால் இப்பாடசாலையின் அபிவிருத்தியில் பலபடிகளை எம்மால் தாண்டமுடியும் என்பதை இவ்வேளையில் தெரிவித்து நிற்கின்றேன். உங்கள் பிள்ளைகளின் கல்வியில் மிகுந்த அக்கறை கொள்ளுங்கள் பிள்ளைகளின் கல்வி தொடர்பில் பாட ஆசிரியர்கள், வகுப்பாசிரியர்கள், அதிபர் ஆகியோருடன் அடிக்கடி கலந்துரையாடுங்கள். பிள்ளைகளைக் கிரமமாக பாடசாலைக்கு அனுப்புங்கள். அவர்களது உடல்நலம், போஷாக்கு என்பனவற்றில் கவனம் செலுத்துங்கள். எதிர்கால சமூகத்தின் நற்பிரஜைகளாக இம் மாணவர்கள் மலர்வதற்கு பெற்றோரும் பழையமாணவர்களும் முழுமையான பங்களிப்பை எமக்கு நல்குங்கள்.

## எமது நன்றிகள்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக தமது பங்களிவ்பை இதுவரை நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகளை இவ் வேளையில் தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக இப் பாடசாலையில் பணியாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் இவ்வேளையில் எமது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

பாடசாலையின் அபிவிருத்திக்காக பங்களிப்பினை நல்கிய, நல்கிவருகின்ற பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதேவேளை பாடசாலையின் அபிவிருத்திக்காக காத்திரமான பங்களிப்புக்களை வழங்க பெற்றோர்கள் பழைய மாணவர்கள் முன்வரவேண்டுமென இவ்வேளையில் அவர்கள் ஒவ்வொருவரையும் வேண்டுகின்றேன்.

மேலும், எமது பாடசாலையின் அபிவிருத்திக்காக பௌதீக வளத் தேவைகள், மனிதவளத் தேவைகள் மற்றும் பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்து தருவதில் மிகுந்து கவனத்துடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் யாழ் வலயக் கல்வித்திணைக்கள வலயக் கல்விப்பணிப்பாளர், முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர்கள்,பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்கும் இவ்வேளையில் உளங்கனிந்த எமது நன்றிகளைத் தெரிவித்து நிற்கிகின்றோம்.

எமது பாடசாலையின் கட்டிடம் மற்றும் பௌதிக வளத்தேவைகளை நிறைவேற்றுவதில் மிகுந்த ஈடுபாட்டுடன் செற்பட்டு எமது பல்வேறு தேவைகளை நிறைவேற்றித் தந்த கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளர், தொழில்நுட்ப அலுவலர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் எமது பாடசாலையின் குடிநீர் விநியோகம் மற்றும் மலசல கூடவசதித் தேவைகளை நிறைவான வகையில் நிறைவேற்றித் தந்த யுனிசெவ் அமைப்பின் பொறியியலாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

பாடசாலையின் முன்னேற்றத்திற்காக உழைக்க முனைந்து நிற்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக என்னோடிணைந்து பணியாற்றுகின்ற எமது பாடசாலை ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. தொடர்ந்து பணியில் சிறந்து இவ்வித்தியாலயத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டுமென இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே.............. பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முழுமையாக முயற்சியுங்கள், பாடசாலை வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி சமூகத்தின் எதிர்பார்புக்களுக்கேற்ற நல்மனிதர்களாக வாழ்வதற்காக பாடசாலை வாழ்க்கையைப் பயன்படுத்துங்கள். தரமான கல்வியைப் பெற்று ஒழுக்கமுள்ள சமூகவிழுமியங்களை மதிக்கும் நல்மனப்பாங்குமுள்ள மனிதர்களாக வளர இவ்வேளையில் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

இறுதியாக இன்றைய விழாவில் எமது அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதமவிருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி

வணக்கம்

17/09/2011 அதிபர்

## our acadamy staff

| | | |
|---|---|---|
| 1. | Mr.J.A. Thavanayagam(principal) | B.A, Dip in Ddu, M.ed, - SLPS -2II |
| 2. | Mr. M. Perinpamoorthy (vice-principal) | Commerce Trd. |
| 3. | Mr.P.Pramsothy | Pri Trd |
| 4. | Mr.P.Pratheepan | Art Trd |
| 5. | Mrs. S.Thavakumar | Pri Trd |
| 6. | Mr.N.Sivakaran | Agri Trd |
| 7. | Mr. S.Ravichandran | BSc. Dip in Edu |
| 8. | Mr. S. Indrakumar | BSc. Dip in Edu |
| 9. | Mr. T. Sayanthan | End.Trd |
| 10. | Mr. K.Kirubakaran | B.A |
| 11. | Mr. T.Jeevananthan | B.A(Hons) |
| 12. | Miss. K. Vithya | B.A(Hons) |
| 13. | Mrs. J. Jemalda | B.A |
| 14. | Mr.R.Kokulan | HNDA |
| 15. | Mr. R.Elango | N.C.O.E Dip.in.teaching (Primary) |
| 16. | Mrs. J. Prabakaran | B.F.A(Music) |
| 17. | Mrs. K.Shanthini | B.F.A(Art) |
| 18. | Miss.P.Sathyapriya | B.F.A(Dance) |
| 19. | Miss. S. Kalasini | T.A |

### பாடசாலை முகாமைத்துவக்குழு

| | | |
|---|---|---|
| 1. | திரு.J.A.தவநாயகம் | அதிபர் |
| 2. | திரு.மு.பேரின்பமூர்த்தி | உபஅதிபர் |
| 3. | திரு.பொ.பரஞ்சோதி | பகுதித்தலைவர்(ஆரம்பப்பிரிவு) |

### ஒழுக்காற்றுக்குழு

1. அதிபர்
2. மு.பேரின்பமூர்த்தி
3. திரு.க.கிருபாகரன்
4. செல்வி.சி.கலாசினி

### பாடசாலை பரீட்சைகள் குழு

1. அதிபர்
2. திரு.S.இந்திரகுமார்
3. திரு.ப.பிரதீபன்
4. செல்வி.கு.வித்யா
5. திரு.து.சயந்தன்

## கட்டாய வரவுக்குழு

1. அதிபர்
2. பெற்றோர் பிரதிநிதிகள்
    - i) திரு. இ. விசுவரத்தினம்
    - ii) திரு. மா. தங்கத்துரை
    - iii) திரு. அ. சத்தியரூபன்
    - iv) திரு. து. சிவகுமார்
    - v) திருமதி. மோ. சகுந்தலாதேவி
    - vi) திரு. க. விஸஷ்னுதாசன்
3. ஆசிரிய பிரதிநிதிகள்
    - i) திரு. மு. பேரின்பமூர்த்தி
    - ii) திரு. கு. சத்தியபாமா
    - iii) செல்வி. சி. கலாசினி

## பாடசாலை உணவூட்டல் குழு

1. அதிபர்
2. திரு. மு. பேரின்பமூர்த்தி
3. திரு. க. கிருபாகரன்
4. திருமதி. து. ஜெமில்டா

பெற்றோர் பிரதிநிதிகள்

திருமதி. வி. உஷாநந்தினி
திருமதி. கோ. சசிகலா
திரு. தி. கேசவரூபன்
திருமதி. வி. சசிகலாதேவி
திரு. மா. தங்கத்துரை

## பாடசாலை அபிவிருத்திக்குழு

| | | |
|---|---|---|
| 1. தலைவர் | - | அதிபர் |
| 2. செயலாளர் | - | திரு. கேசவரூபன் (பெற்றோர்) |
| 3. பொருளாளர் | - | திரு. சு.இந்திரகுமார் |
| 4. உபதலைவர் | - | திரு. மு. பேரின்பமூர்த்தி |
| 5. உபசெயலாளர் | - | |
| பிரதிநிதிகள் | - | திரு. க. சுந்தரவேல் (பெற்றோர்) |
| | | திரு. மு. சபாநாதன் (பெற்றோர்) |
| | | திரு. இ. புவனேந்திரன் (பழையமாணவர்) |
| | | திரு. ஐ. ஐசீபன் (பழையமாணவர்) |
| | | திரு. அ. பகீரதன் (பழையமாணவர்) |
| | | திரு. க. கிருபாகரன் (ஆசிரியர்) |
| | | திரு. ப. பிரதீபன் (ஆசிரியர்) |
| வலயக்கல்வித்தணைக்கள பிரதிநிதி | | திரு. S. தியாகராஜா(ADE English) |

# பரிசில் பெறும் மாணவர் விபரம்

## தரம் - 2 (2010)

**அதிவிசேட தகைமை**

1. வி.தர்மிஷன்
2. மோ. டினோஜன்
3. கி. ஜீவிகா
4. பொ. சுவேதா
5. த. அபிநயா
6. கெ. பிரியங்கா

## தரம் - 3 (2010)

**அதிவிசேட தகைமை**

1. கே.மதுமிலன்

**விசேட தகைமை**

1. கோ. ஜகீசன்
2. உ. சாளினி
3. சு. கலையருவி

## தரம் - 4 (2010)

**விசேட தகைமை**

1. சு. சாருஷா
2. வி. நிறோஜன்
3. இ. லிவின்சிகா

**சாதாரண தகைமை**

1. இ. யதுசன்
2. க. பவீசன்
3. பி. பிரதாபன்

## தரம் - 5 (2010)

**அதிவிசேட தகைமை**

1. கோ. விதுசன்

**விசேட தகைமை**

1. க. சுஜிபா
2. க. நிருத்திகா
3. க. சுஜீவன்

**சாதாரண தகைமை**

1. வி. சுவேதிகா
2. மு. யாழினி
3. ச. கஜீபனா
4. ஜெ. அஜிந்தா

## தரம் - 6 (2010)

**சாதாரண தகைமை**

1. ச. சஸ்ரீபா
2. வி. யனித்தா
3. ச. நிவேரா
4. செ. லகீசன்
5. லி. நிசாந்தாஸ்

## தரம் - 7 (2010)

### சாதாரண தகைமை

1. கி. ஜீவகன்
2. க. பிரஷன்
3. கு. ஜெசிந்தா
4. செ. லவண்யா

## தரம் - 8 (2010)

### விசேட தகைமை

1. அ. நிருபா

### சாதாரண தகைமை

1. சு. மதுர்ஷா
2.ச. ஜெகிந்தாஸ்
3. க. சாளினி

## தரம் - 9 (2010)

### சாதாரண தகைமை

1. யோ. பிரசாந்தினி
2. இ. கீர்த்தனா
3. லி. ஜெசிந்தாஸ்

## தரம் - 10 (2010)

### அதிவிசேட தகைமை

1. கி. கீர்த்திகா
2. ஈ. சுஜிபா
3. றெ. நிவேதன்

### விசேட தகைமை

1. அ. லாவண்யா
2. வி. விதித்தா

### சாதாரண தகைமை

1. த. அரிகரன்
2. பா துசிபுவன்

## சிறப்புப் பரிசில்கள் ( Speciai Prizes)

கடந்த ஆண்டில் (2010) பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் தமது திறமைகளை வெளிக்காட்டி பாடசாலை மட்டத்தில்,கோட்ட மட்டத்தில், வலய மட்டத்தில்,மாகாண மட்டத்தில் வெற்றிகளை பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான சிறப்புப்பரிசில்கள்:-

### 1) விளையாட்டுப் போட்டி வெற்றியாளர்கள் - (2010)

1. இ.றேகன் - 11 வயதின் கீழ் பிரிவு - உயரம் பாய்தல்
   கோட்ட மட்டம் - முதலாமிடம்
2. பா.தினேசா - 11 வயதின் கீழ் பிரிவு -
   கோட்ட மட்டம் - 100m,
   உயரம் பாய்தல் - 2ம் இடம் ,
   75m- 2ம் இடம்
   வலய மட்டம் - 100m - 2ம் இடம்
   மாவட்டமட்டம் - உயரம் பாய்தல் 1ம்இடம்
   மாகாணமட்டம் - உயரம் பாய்தல் 1ம்இடம்
3. ப.கஜிதா - 15 வயதின் கீழ் பிரிவு -
   கோட்ட மட்டம் - நீளம் பாய்தல் - 2ம் இடம்
4. யோ.பிரதாபன் - 17 வயதின் கீழ் பிரிவு
   கோட்ட மட்டம் - ஈட்டி எறிதல் - 3ம் இடம்
5. இ.ரேகா - கோட்ட மட்டம் - 400m - 3ம் இடம்
6. ஜெ.டிசாந் - 19 வயதின் கீழ் பிரிவு
   கோட்ட மட்டம் - 800m - 3ம் இடம்
7. பா.ஜசிகன் - மாவட்டமட்டம் -
   மாகாணமட்டம் 1500m 1ம்இடம்
8. அ.திசானி - கோட்ட மட்டம் - தட்டு எறிதல் - 2ம் இடம்
   ஈட்டி எறிதல் - 3ம் இடம்

### 2) தமிழ்மொழித்தினம் - (2010)

கோட்டமட்ட வெற்றியாளர்கள்

1. பிரிவு - 1 வாசிப்பு க.சுஜீவா - 3ம் இடம்
2. பிரிவு - 2 இசை-தனி ம.சுபாசினி 1ம் இடம்

2) **English Day** 2010

**Divisional Level - Winners**

1. K.Mathumilan - Grade 3 - Recitation - 3rd Place
2. S.Shashteepa - Grade 6 - copywriting - 3rd Place
3. P.Kajitha - Grade 9 - copywriting - 3rd Place

**School Level - Winners**

1. K.ஜகீசன் - Grade 3 - copywriting,Recitation
2. R.லிவின்சிகா - Grade 4 - copywriting
3. V.நிரோஜன் - Grade 4 - Recitation
4. R.யதுசன் - Grade 4 - Recitation
5. S.சாருஸா - Grade 4 - copywriting
6. P.தினேஷா - Grade 5 - copywriting
7. K.விதுஷன் - Grade 5 - copywriting
8. K.சுஜீபா - Grade 5 - Recitation
9. K.நிருத்திகா - Grade 5 - Recitation
10. R.தனுஷன் - Grade 6 - copywriting,Recitation
11. Y.ஜெனித்தா - Grade 6 - Dictation,Creative Writing
12. Y.யாழினி - Grade 6 - Dictation,Creative Writing
13. K.ஜீவகன் - Grade 7 - Dictation,copywriting
14. K.ஜெசிந்தா - Grade 7 - Recitation
15. S.லவண்யா - Grade 7 - Dictation
16. J.அஜிந்தாஸ் - Grade 7 - Creative Writing
17. J.தேனுஷன் - Grade 7 - Creative Writing
18. M.நிருபா - Grade 8 - copywriting,Recitation
19. M.சுபாசினி - Grade 8 - Recitation
20. K.சர்விகா - Grade 8 - Recitation
21. T.தர்சிகா - Grade 8 - Creative Writing
22. P.மதுர்ஷா - Grade 8 - Creative Writing
23. K.ஜமேஷா - Grade 9 -Creativewriting,Recitation

24. M.பிரசாந்தினி - Grade Dictation,Recitation
25. R.கீர்த்தனா - Grade 9 - Dictation,copywriting
26. A.லாவண்யா - Grade 9 - Dictation,copywriting
27. V.விதித்தா - Grade 10 - Dictation,copywriting
28. K.கீர்த்திகா - Grade 10- Dictation,copywriting
29. R.சுஜிபா - Grade 10- Dictation
30. R.நிவேதன் - Grade 10- Creative Writing
31. R.விஜிதா - Grade 10- Creative Writing
32. M.ஜசிந்தினி - Grade 11- Dictation,copywriting
33. L.தஜிந்தாஸ் - Grade 11- Dictation
34. B.ஜசிகன் - Grade 11- Dictation
35. N.காருண்யா - Grade 11- Recitation
36. S.எஜிந்தா - Grade 11 - Creative Writing

4) "பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம்" எனும் தலைப்பில் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப்போட்டி - (2010)

1. B.தினேஷா - பிரிவு 1 கோட்டமட்டம் 2ம் இடம்

5) அழகியல் போட்டிகள் - 2010

1. R.நிவேதன் - தரம் 10 - பொருட்கூட்டம்
2. k.கிருசாந் - தரம் 10 - கருத்துவெளிப்பாட்டுச்சித்திரம்
3. V.விதுஷன் - தரம் 10 - ஆக்கஅலங்காரம்
4. S.லவோஜன் - தரம் 10 - பொருட்கூட்டம்
5. T..அரிகரன் - தரம் 10 - கருத்துவெளிப்பாட்டுச்சித்திரம்
6. Y.பிரதாபன் - தரம் 10 - ஆக்கஅலங்காரம்

6) திருக்குறள் மனனப் போட்டி - 2010

1. ப.வைஷ்ணவி - தரம் 1 பாடசாலை மட்டம், கோட்ட மட்டம்-1ம்இடம்
2. த.அபிநயா - தரம் 2 பாடசாலை மட்டம் - 1ம்இடம்
3. கே.மதுமிலன் - தரம் 3 பாடசாலை மட்டம் - 1ம்இடம்
4. கோ.விதுஷன் - தரம் 5 பாடசாலை மட்டம் - 1ம்இடம்
5. சி.கஜானா - தரம் 1 பாடசாலை மட்டம் - 2ம்இடம்
6. நா.மிதுகா - தரம் 1 பாடசாலை மட்டம் - 3ம்இடம்
7. க.டிலக்ஷா - தரம் 2 பாடசாலை மட்டம் - 2ம்இடம்
8. சி.ஜீவிகா - தரம் 2 பாடசாலை மட்டம் - 3ம்இடம்

8) சமூகவிஞ்ஞானப் போட்டி - 2010

கடந்த ஆண்டில் எமது பாடசாலை மாணவர்கள் சமூக விஞ்ஞானப்போட்டியில் வலயமட்டத்திலும் மாகாண மட்டத்திலும் வெற்றி பெற்று தேசிய போட்டியிலும் வெற்றிபெற்று தேசிய போட்டியிலும் பங்குபற்றினர்.

1. லி. தயிந்தாஸ் - மாகாணமட்டம் 2ம் இடம் பெற்று தேசிய போட்டியில் பங்குபற்றினர்.
2. றெ. நிவேதன் - வலயமட்டம் 2ம் இடம்
3. ஈ. சுஜிபா - வலயமட்டம் 3ம் இடம்

9) கணிதவினாவிடைப் போட்டி - 2010

கணிதவினாவிடைப்போட்டியில் பாடசாலைமட்டத்தில் வெற்றிபெற்று கோட்டமட்ட போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தரம் 6 | - | செ.லகீசன் | - | 1ம்இடம் |
| | | ச.சஸ்ரீபா | - | 2ம்இடம் |
| | | செ.செந்தீபன் | - | 3ம்இடம் |
| 2. தரம் 7 | - | கி.ஜீவகன் | - | 1ம்இடம் |
| | | க.பிரஷன் | - | 2ம்இடம் |
| | | செ.லவண்யா | - | 3ம்இடம் |
| 3. தரம் 8 | - | ம.யசிதா | - | 1ம்இடம் |
| | | அ.நிருபா | - | 2ம்இடம் |
| | | ச.ஜெகிந்தாஸ் | - | 3ம்இடம் |
| 4. தரம் 9 | - | ந.பிரதீப் | - | 1ம்இடம் |
| | | இ.சுரேகுலன் | - | 2ம்இடம் |
| | | மோ.பிரசாந்தினி | - | 3ம்இடம் |
| 5. தரம் 10 | - | கி.கீர்த்திகா | - | 1ம்இடம் |
| | | றெ.நிவேதன் | - | 2ம்இடம் |
| | | ஈ.சுஜீபா | - | 3ம்இடம் |
| 6. தரம் 11 | - | லி.தயிந்தாஸ் | - | 1ம்இடம் |
| | | அ.துயிந்தன் | - | 2ம்இடம் |
| | | யோ.நிஷாந்தன் | - | 3ம்இடம் |

9) விவசாய அறிவுப் போட்டி - 2010

பாடசாலைமட்ட வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு கோட்டமட்டபோட்டிகளில் பங்குபற்றியோர்.

| | | | |
|---|---|---|---|
| தரம் 11 | 1. R.தயிந்தாஸ் | - | 1ம்இடம் |
| | 2. M.யசிந்தினி | - | 2ம்இடம் |
| | 3. Nகாருண்யா | - | 3ம்இடம் |

11) **விஞ்ஞான அறிவுப் போட்டி - 2010**

விஞ்ஞான வினாவிடைப்போட்டிக்காக பாடசாலைமட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு கோட்டமட்ட போட்டிகளில் பங்குகொண்டவர்கள்.

தரம் 6 ச.சஸ்ரீபா, க.கனுசன், இ.தனுதன்
தரம் 7 செ.லவண்யா, கி.ஜீவகன், வி.சுபன்
தரம் 8 அ.நிருபா, பு.மதுஷா, ச.ஜெகிந்தாஸ்
தரம் 9 இ.கீர்த்தனா, ப.கஜிதா, மோ.பிரசாந்தினி
தரம் 10 றெ.நிவேதன், கி.கீர்த்திகா, பா.துசிபுவன்

12) **சைவபரிபாலன சபைத் தேர்வு - 2010**

சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட தேர்வில் கடந்த வருடத்தில் தமிழ்மொழி, சைவநெறி ஆகிய இரு பாடங்களிலும் A தரச் சித்தி பெற்றவர்கள்.

1. தரம் 2
   1. த.அபிநயா
   2. பொ.சுவேதா
   3. கெ.பிரியங்கா
   4. கி.ஜீவிகா
   5. ப.டிலக்ஷிகா
2. தரம் 9
   1. இ.கீர்த்தனா

**விசேட பரிசில்கள்**

1. க.பொ.த சாதாரண பரீட்சையில் உயர்பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள்
   1. 2009 ஆண்டில் S.தனுசியா 4A B 3C
   2. 2010 ஆண்டில் L.தஜிந்தாஸ் 5A 2B C
2. சிறந்த நூலகப்பயன்பாட்டாளர்
   1. ஈ.சுசீபா
3. **உயர்வான** பாடசாலை **வரவினைக்கொண்டோர்**

   1. கடந்த ஆண்டில் (2010) 195 பாடசாலை நாட்களில் முழுமையாக வருகை தந்து 100 % வரவினை உறுதிப்படுத்திய மாணவர்கள்.
      1. கோ.விதுஷன் தரம் 5 (2010 195 நாட்கள்)
   2. கிட்டிய உயர் வரவை உறுதிப்படுத்தியோர்
      1. பா.திணேஷா தரம் 5 (2010 194 நாட்கள்)
      2. க.நிருத்திகா தரம் 5 (2010 194 நாட்கள்)
      3. த.தர்ஷிகா தரம் 8 (2010 193 நாட்கள்)
4. சிறந்த மாணவர்

   அரப்பணிப்பும் பற்றுதியும் மிக்க சிறந்த மாணவனாக தெரிவுசெய்யப்பட்டவர்.

   செல்வன். சி.ஜிவன்சன்

## பரிசில் நாள் நிகழ்விற்கு நிதி அன்பளிப்புச்செய்தோர் - 2011

| | |
|---|---|
| 1) கு.கானமூர்த்தி (பழைய மாணவன்- லண்டன்) | 10,000.00 |
| 2) மு.பாரதிதாசன் | 500.00 |
| 3) மு.பரமேஸ்வரன் | 500.00 |
| 4) பொ.யோகநாதன் | 500.00 |
| 5) சி.லிங்கராஜா | 300.00 |
| 6) க.இரத்தினசிங்கம் | 300.00 |
| 7) சி.சுதாகரன் | 150.00 |
| 8) S.துரைராசா | 200.00 |
| 9) கு.இந்தரகுமார் | 200.00 |
| 10) சு.கோபாலகிருஷ்ணன் | 200.00 |
| 11) சி.பத்மரூபன் | 200.00 |
| 12) S.சிவகுமார் | 200.00 |
| 13) இ.யோகேஸ்வரன் | 150.00 |
| 14) வை.இரத்தினராசா | 200.00 |
| 15) த.அன்னசெல்லபாக்கியராசா | 150.00 |
| 16) வை.தங்கவேலு | 200.00 |
| 17) சி.ஈஸ்வரன் | 150.00 |
| 18) சி.அனுஷா | 150.00 |
| 19) த.கணேசராசா | 200.00 |
| 20) செ.மகாராசா | 200.00 |
| 21) ச.முருகானந்தம் | 200.00 |
| 22) கெ.வசந்தா | 200.00 |
| 23) து.ஜெகதீஸ்வரன் | 200.00 |
| 24) க.செல்வரூபினி | 200.00 |
| 25) றெ.சத்தியவாணி | 200.00 |
| 26) சி.தங்கராசா | 200.00 |
| 27) இ.ஜெகநாதன் | 150.00 |
| 28) இ.சிவசுப்பிரமணியம் | 250.00 |
| 29) S .புலேந்திரன் | 150.00 |
| 30) S.மயூரன் | 150.00 |
| 31) தி.திருவருட்செல்வன் | 200.00 |
| 32) சி.இரவீந்திரராசா | 200.00 |
| 33) கி.மோகனராசா | 200.00 |
| 34) ந.இலட்சணகுமாரி | 200.00 |
| 35) ச.விஜயானந்தராசா | 200.00 |
| 36) க.விஷ்னுதாசன் | 150.00 |
| 37) S.மகேந்திரம் | 150.00 |
| 38) இ.பாஸ்கரமூர்த்தி | 200.00 |
| 39) ப.செல்வநாதன் | 150.00 |

| | | |
|---|---|---|
| 40) | க.குணதாசன் | 150.00 |
| 41) | சி.விவேகானந்தராசா | 150.00 |
| 42) | மு.பத்மநாதன் | 150.00 |
| 43) | த.கிருஷ்ணராசா | 150.00 |
| 44) | கு.குணதேவசர்மா | 150.00 |
| 45) | து.நவரத்தினராசா | 200.00 |
| 46) | S.சோதிநாதன் | 150.00 |
| 47) | த.கிருஷ்ணரூபன் | 200.00 |
| 48) | து.விஜயானந் | 150.00 |
| 49) | க.கணேசநாதன் | 150.00 |
| 50) | மு.விமலகாந்தன் | 150.00 |
| 51) | கி.கிருஷ்ணகௌசலா | 150.00 |
| 52) | கு.லோகநாதன் | 150.00 |
| 53) | செ.சந்திரகுமார் | 150.00 |
| 54) | வை.சக்திவேல் | 200.00 |
| 55) | S.உருத்திரசிங்கம் | 170.00 |
| 56) | க.செந்தமிழ்ச்செல்வன் | 200.00 |
| 57) | இ.இரதிவிஞ்சன் | 200.00 |
| 58) | சி.கோகிலதாசன் | 200.00 |
| 59) | க.அமிர்தலிங்கம் | 150.00 |
| 60) | மு.சபாநாதன் | 200.00 |
| 61) | வி.விஜயமனோகரி | 200.00 |
| 62) | சி.இரத்தினகோபால் | 200.00 |
| 63) | செ.தவேந்திரராசா | 150.00 |
| 64) | க.கணேசராசா | 150.00 |
| 65) | கு.அரியரத்தினம் | 150.00 |
| 66) | ச.தயானந்தராசா | 150.00 |
| 67) | பொ.சுதாகரன் | 200.00 |
| 68) | செ.ராசன் | 150.00 |
| 69) | S.பொன்னத்துரை | 200.00 |
| 70) | ம.ரதீஸ்குமார் | 100.00 |
| 71) | S.சிவபாதம் | 100.00 |
| 72) | தெ.தெய்வமகன் | 200.00 |
| 73) | க.பிறேமதாசன் | 150.00 |
| 74) | S.தயானந்தன் | 200.00 |
| 75) | கி.இரத்தினசிங்கம் | 200.00 |
| 76) | பொ.இலட்சணமூர்த்தி | 200.00 |
| 77) | க.மாயராசா | 150.00 |
| 78) | தி.நாகேஸ்வரன் | 200.00 |
| 79) | சி.மஞ்சளாதேவி | 100.00 |
| 80) | க.சிறிஸ்கந்தராசா | 200.00 |

# பாடசாலைக் கீதம்

இராகம்: நாதநமக்கிரியை    தாளம்: திஸ்ரகதி ஆதி

வளம்பெருகும் புத்தூரில் வாதரவூர் இலங்கும்
வள்ளலங்கு விக்(கி)னேசு வரன் அருளி விளங்கும்
ஏழுகன்னிமார் ஒருபால் எழுந்தருளிக் காக்கும்
எங்கல்விச் சாலைதனில் ஏர்புகழை அளிக்கும்
பொறியாளர் வைத்தியர்கள் போதிக்கும் ஆசார்
பொற்கலனாய் அமைந்தார்கள், போலிகளைப்பேசார்
அறிநூலும் அருநிதியும் ஆன்றோரும் வேண்டும்
அருங்கல்வி நற்செயலும் ஆர்வமுடன் வேண்டும்
விக்(கி)னேசு வரவித்தி யாசாலை வாழ்க!
விநாயகரும் கன்னியரும் விதந்தருளி வாழ்க!

சைவப்புலவர்
இ.செல்லத்துரை